2002 மே 9]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானங்களை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எல்லா உறுப்பினர்களும் இந்த மாதிரி குழுக்களில் எல்லாம் கலந்துகொண்டு அனுபவங்கள் பெறுவதற்காகத்தான் இப்படிப்பட்ட குழுக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை இப்படி one year-ஆக automatic extension கொடுப்பது என்பது ஓர் ஆரோக்கியமான process அல்ல. ஜனநாயகபூர்வமான.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. 2, 3 மாதங்கள்தான் ஆகின்றன. அதனால்தான்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு ஆகிய 4 குழுக்களின் பதவிக் காலம் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்படுகின்றன.

(ஆ) அவை உரிமைக் குழு, சட்டவிதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதி மொழிக்குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு மற்றும் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு— பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு மற்றும் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு ஆகிய குழுக்களை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பது குறித்த அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு,

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு மற்றும் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக் காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 227(2), 239(2), 248(2), 253(2), 261(3), 264(2) மற்றும் 268(4) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து மேலும் ஒரு நிதி ஆண்டு காலத்திற்கு, அதாவது 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு........

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் என்ன என்று கேட்டீர்கள் என்றால்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. முடித்து விடுகிறேன். அரையும், குறையுமாக நிற்கிறது. அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு ஆகிய 7 குழுக்களுக்கு - அலுவல் ஆய்வுக் குழுவின் பதவிக் காலமும் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்படுகின்றன. என்ன பழனிசாமி சொல்லுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அசெம்பிளியில் அமைக்கப்பட்டு இருக்கிற பல்வேறு குழுக்கள் முக்கியத்துவம் வாய்ந்த குழுக்கள். ஆனால் நியமிக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்கள் அந்தக் குழுக்களுக்கு முறையாக வருவதில்லை. இதை

2002 மே 9] [திரு. ஜி. பழனிசாமி]

நீங்கள் வலியுறுத்த வேண்டும். அதைப்போன்று பல உறுப்பினர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அந்த இடங்களும் நிரப்பப்பட வேண்டும். அதற்கான பட்டியலையும் நீங்கள் அறிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். முதலிலே, இந்தக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கண்டிப்பாக கலந்துகொள்ள வேண்டும். இதிலே பெரும்பகுதி ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், முற்றிலும் இந்தக் குழுக்களிலே கலந்துகொள்வது இல்லை என்கிற ஒரு குறைபாடு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அமைச்சர்களாக ஆனவர்களுக்குப் பதிலாக யாரை நியமிப்பது என்பது பின்னர் அறிவிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் - குழுவில் இடம் பெற்றிருக்கிற உறுப்பினர்கள் நிச்சயமாக குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கூட இரண்டு குழுக்களுடைய தலைவராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஆளும் கட்சி தரப்பிலே இருக்கிற உறுப்பினர்கள் பெரும்பாலோர் கலந்துகொள்வது இல்லை என்கிற குறைபாட்டினைச் சொன்னார்கள். ஆனால் என்னுடைய அனுபவத்திலே........

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. எல்லாக் கட்சிகளிலேயிருந்தும்தான் சரியாக வரமாட்டேன் என்கிறார்கள்.

திரு. டி.கே. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவை விதிகள் குழுவிலே உறுப்பினராக இருக்கிறேன். இதுவரையில் ஒருநாள்கூட அந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை. எங்களை அழைக்கவில்லை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அது பற்றி தனியாகப் பேசுவோம்.